# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

வியாழக்கிழமை 03.06.2021 supeedsam.com supeedsam@gmail.com









## கிழக்கில் நேற்றைய கொரோனா நிலவரம்

| | |
|---|---|
| **திருகோணமலை** | **10** |
| மூதூர் | 10 |
| **மட்டக்களப்பு** | **100** |
| மட்டக்களப்பு | 04 |
| காத்தான்குடி | 16 |
| ஏறாவூர் | 05 |
| கோரலை. மத்திய | 09 |
| செங்கலடி | 01 |
| பட்டிப்பலை | 01 |
| ஓட்டமாவடி | 11 |
| கிராண் | 10 |
| களுவஞ்சிக்குடி | 10 |
| வாழைச்சேனை | 01 |
| ஆரையம்பதி | 16 |
| வெல்லவெளி | 11 |
| சிறைக்கைதிகள் | 02 |
| பொலிஸார் | 03 |
| **அம்பாறை** | **14** |
| மகா ஓயா | 06 |
| உஹன | 01 |
| தமன | 01 |
| பதியத்தலாவ | 03 |
| தேஹியாதகண்டி | 02 |
| **கல்முனை** | **20** |
| சம்மாந்துறை | 09 |
| காரைதீவு | 04 |
| அக்கரைப்பற்று | 03 |
| அட்டாலைசேனை | 01 |
| ஆலையாடிவேம்பு | 01 |
| கல்முனை வடக்கு | 01 |
| திருக்கோவில் | 01 |
| **உயிரிழப்பு** | |
| ஆரையம்பதி | 01 |



# மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு எந்த பாதிப்பும் வரக்கூடாது

## அதிகாரிகளிடம் ஜனாதிபதி எடுத்துரைப்பு



(ராஜ்)

இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படாத வகையில், அத்தியாவசியச் சேவைகளைப் பேணுவதற்கு, ஆளுநர்கள் மற்றும் மாவட்டச் செயலாளர்கள் தனிப்பட்ட முறையில் தலையீடு செய்ய

02 ஆம் பக்கத்தில்...

## மட்டக்களப்பில் 8 முதல் தடுப்பூசி வழங்கப்படும்

(காந்தன்)



அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, மாத்தளை, நுவரெலியா, ஹம்பாந்தோட்டை, பதுள்ளை, அனுராதபுரம், புத்தளம், மொனராகலை, கேகாலை, மற்றும் பொலன்னருவை ஆகிய மாவட்டங்களில் சினோபார்ம் தடுப்பூசி

02 ஆம் பக்கத்தில்...

## மட்டக்களப்பில் மருத்துவமனைகள் நிறைந்தன திணறும் சுகாதார துறையினர்

(படுவான்பாலகன்)



மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏழு நாட்களில் 718 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், அங்குள்ள வைத்தியசாலைகள் அனைத்தும் நிரம்பியுள்ளதனால் மாவட்ட சுகாதாரத் துறையினர்

02 ஆம் பக்கத்தில்...

## தமிழ் பேசும் இளைஞர்களை கைது செய்து அவர்களின் எதிர்காலத்தை அரசாங்கம் கேள்விக்குள்ளாக்குகிறது

(ரக்ஸனா)



இந்த அரசாங்கம் தொடர்ந்தும் தமிழ் பேசும் இளைஞர்களை கைது செய்து கஷ்ரத்திற்குள் தள்ளிவிடுகின்றது என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு

02 ஆம் பக்கத்தில்...

## திருமலையில் 31 புதிய தொற்றாளர்கள்; நால்வர் பலி

(கதிரவன்)

திருகோணமலையில் கடந்த 24 மணி நேரங்களில் 19 ஆண், 12 பெண் அடங்கலாக 31 பேர் புதிய தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ள அதேவேளை, நால்வர் மரணமடைந்துள்ளனர்.

இதற்கமைய மாவட்டத்தின் மொத்த இறப்பு 91 ஆக அதிகரித்துள்ளது.

## 5 ஆயிரம் ரூபா மக்களுக்கு கிடைக்குமா? அரசு உறுதிப்படுத்த வேண்டும்; இம்ரான் எம்.பி

(அப்துல்சலாம் யாசீம்)



கொரோனா 3 வது அலை காரணமாக முடக்கப்பட்டுள்ள மக்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படவுள்ள கொடுப்பனவின் போது உண்மையில் 5 ஆயிரம் ரூபா மக்களின் கைகளுக்கு கிடைக்குமா? என்பதை அரசு உறுதிப்படுத்த வேண்டும் என திருகோணமலை மாவட்டப்

02 ஆம் பக்கத்தில்...

## 9 நாட்களின் பின்னர் கடலுக்கு சென்ற மீனவர்கள்

(பொன்ஆனந்தம்)

திருகோணமலை மீனவர்கள் 9நாட்களின் பின்னர் தமது கடற்றொழிலுக்கு இன்று சென்றதாக மீனவர் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த 23 ம்தேதி திருக்கடலூர் கிராமத்தில் இருந்து கடலுக்கு சென்ற 3 மீனவர்கள் கரைதிரும்பவில்லை.

இதனையடுத்து அவர்களை தேடும்

02 ஆம் பக்கத்தில்...






## மண் கடத்தலில் ஈடுபட்ட 14 பேர் கைது

(ந.குகதர்சன்)



மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரைப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஓமடியாமடு பகுதியில்

02 ஆம் பக்கத்தில்...

## பயணத்தடை 14 வரை நீடிக்கப்பட்டது

தற்போது அமுலில் உள்ள பயணத்தடை தொடர்ந்தும் நீடிக்கப்படுவதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

குறித்த தடை 7ஆம் திகதி நீக்கப்படாது என்றும் எதிர்வரும் 14ம் திகதி

02 ஆம் பக்கத்தில்...











## தமிழர்களால் முஸ்லீம்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது வரலாற்றை திரும்பிப்பாருங்கள்

### சந்திரநேரு சந்திரகாந்தன்



தமது வங்குரோத்து அரசியலை தக்க வைத்து தமது இருப்பை பாதுகாத்துக் கொள்வதற்காக உண்மையை அறியாமல் வரலாறுகளை திரிபுபடுத்தி பொதுவெளியில் பேசாதீர்கள். இவ்வாறு அம்பாறை மாவட்ட தமிழ்தேசியகூட்டமைப்பின் முன்னாள்

02 ஆம் பக்கத்தில்...











## ஓட்டமாவடி பிரதான வீதிகளில் பொலிஸ், இராணுவத்தினர் சோதனை

(ந.குகதர்சன்)

நாடளாவிய ரீதியில் பயணக்கட்டுப்பாடு அமுலில் உள்ள நிலையில் தேவையின்றி மக்கள் வெளிச்

02 ஆம் பக்கத்தில்...

## 9 நாட்களின் பின்னர் கடலுக்கு சென்ற மீனவர்கள்

நடவடிக்கை க்காக நூற்றுக்கும் அதிகமான மீனவ படகுகளும் மீனவர் களும் தொழில் மறிப்பு செய்திருந்தனர் என விபுலானந்தா மீனவர் கூட்டுறவு சங்க செயலாளர் செ. பிறேமரதன் தெரிவித்தார்.

இடைப்பட்ட காலத்தில் மீனவர்களை தேடும் பணியில் இவர்கள் ஈடுபட்டதுடன் ஏனையவர்கள் சங்க நடமுறைக்கு ஏற்ப தொழில் மறிப்பில் இருந்தனர். காணாமல் போன மீனவர்கள் இன்னும் கிடைக்காத நிலையில் திங்கள் கிழமையுடன் தேடுதலும் நிறுத்தப்பட்டது. இந்நிலையில் நேற்றைய தினம் மீனவர்கள் 9நாட்களின் பின்னர் தொழில் நடவடிக்கை க்கு சென்றனர். எனவும் அவர் தெரிவித்தார். திங்களன்று குறித்த காணாமல்போன படகு சர்வதேச எல்லை யில் வெறுமையாககாணப்பட்டதாக சிலர் தகவல் தந்தபோதும் மீனவர்களுக்கு என்ன நடந்து என்பது தெரியவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## 5 ஆயிரம் ரூபா மக்களுக்கு கிடைக்குமா?

பாராளுமனற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் இவ்விடயத்தை கேட்டுள்ளார்.

மேலும் அதில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது; கொரோனா 3 வது அலையினால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்குதல் என்ற தலைப்பில் பிரதமர் அலுவலகத்தினால் சுற்றறிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொடுப்பனவு பெறத்தகுதியுள்ள மக்கள் ஏற்கனவே சமுர்த்தி போன்ற ஏதாவது கொடுப்பனவு பெற்று வருவார்களாயின் அந்தக் கொடுப்பனவுக்கும் 5ஆயிரம் ரூபாவுக்கும் இடைப்பட்ட தொகையே மக்களின் கைகளுக்கு வந்து சேரும் வகையிலேயே இந்தச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. உதாரணமாக ஒரு குடும்பத்தினர் மாதம் 2500 ரூபா சமுர்த்திக் கொடுப்பனவு பெறுவார்களாயின் அரசாங்கம் குறிப்பிடும் 5 ஆயிரம் ரூபாவிலிருந்து இந்த 2500 ரூபா கழித்து மிகுதி 2500 ரூபா மட்டுமே மக்களின் கைகளுக்கு வந்து சேரும்.

முதியோர் கொடுப்பனவு, பொதுசன மாதாந்த உதவிக் கொடுப்பனவு போன்ற கொடுப்பனவு பெறுவோர்களுக்கும் 5 ஆயிரம் ரூபாவிலிருந்து அவர்கள் பெறும் தொகையைக் கழித்து வரும் மிகுதித் தொகையே வழங்கப் படவுள்ளது. புற்றுநோய், தலசீமியா தொழுநோய், காசநோய் போன்ற நோய்களுக்கான கொடுப்பனவு பெறும் சகலருக்கும் இதே அடிப்படையிலேயே இந்தக் கொடுப்பனவு அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கொரோனா பாதிப்புக்காக எனச் சொல்லப்படும் 5 ஆயிரம் ரூபா அரசினால் வழங்;கப் படப் போவதில்லை என்பது தெளிவாகின்றது. 5 ஆயிரம் ரூபா வழங்குவதாக பிரச்சாரம் செய்து அவர்கள் ஏற்கனவே பெறும் உதவித் தொகைகளை அதிலிருந்து வரும் மிகுதித் தொகையே அரசு வழங்கவுள்ளது.

இந்த அரசு மக்களை எப்படி ஏமாற்றுகின்றது என்பதற்கு இது சிறந்த உதாரணம். 5ஆயிரம் ரூபாவுக்கு குறைந்த தொகை மக்களின் கைகளுக்கு கிடைக்கவுள்ளபோது ஏன் 5ஆயிரம் ரூபா கொடுப்பனவு என்ற பிரச்சாரத்தை அரசு செய்ய வேண்டும் என்பதை தெளிவு படுத்த வேண்டும்.

இலங்கை மக்கள் ஆசியாவில் கல்வி அறிவு கூடிய மக்கள் என்பதை அரசு புரிந்து கொள்ள வேண்டும். இப்படியான போலிப் பிரச்சாரங்களால் அவர்களை ஏமாற்ற முடியாது என்பதை அரசு விளங்கிக் கொள்ள வேண்டும் இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




## தமிழர்களால் முஸ்லீம்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை ஏற்றுக்கொள்ள

நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

கடந்த( 30) ஞாயிறுக்கிழமை தனியார் தொலைக்காட்சியான சக்தியின் மின்னல் நிகழ்ச்சியில் பங்குபற்றிய அம்பாறை மாவட்ட தமிழ்தேசியகூட்டமைப்பின் தேசியபட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் கலையரசன் வழங்கிய செவ்வியில் ''தமிழர்களால் முஸ்லீங்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்'' என கூறிய கருத்துக்கு மறுப்பு தெரிவித்தே இவர் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்

கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு அம்பாறை திருகோணமலை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் கடந்த 3 தசாப்த காலமாக இங்கு வாழும்மக்கள் பல சொல்லொன்னா துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.தமிழர்களின் நிலங்களும் அவர்களின் இருப்புக்களும் மற்றய இனங்களினால் கேள்விக்குட்டுத்தப்பட்டே இன்றுவரை காணப்படுகின்றது.தமிழர்களின் குடியிருப்புக்களும் இருப்புகளும் மரவுரிமை சார்ந்த விடயங்களும் திட்டமிட்ட வகையில் அழிக்கப்பட்டு வருகின்றது.கிழக்குமாகாணத்தில் 30க்கு மேற்பட்ட கிராமங்கள் பறிபோயுள்ளன.50க்கு மேற்பட்ட ஆலயங்கள் இடித்தழிக்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தில் அதிலும் எமது அம்பாறை மாவட்டத்தை பொறுத்தவரையில் தமிழர்களால் முஸ்லீங்கள் பாதிக்கப்பட்ட சம்பவங்கள் அம்பறை மாவட்டத்தில் பிறந்து வளர்ந்தவன் என்ற வகையிலம் 90 ம் ஆண்டிலிருந்து சம்பவங்களை நேரில் முகங்கொடுத்தவன் என்ற வகையிலும் நான் அறிந்திருக்கவில்லை

பாணமை தொடக்கம் பெரியநீலாவணை வரை குறிப்பாக மீனோடைக்கட்டு,திராய்கேணி,சாய்ந்தமருது தமிழ் பிரிவு,வீரமுனை,சம்மாந்துறை,கோரக்கோயில்கிராமம்,மல்வத்தை புதுநகரம்,கணபதிபுரம்,வளத்தாப்பிட்டி,மல்லிகைத்தீவு,வீரன்சோலை இறக்காமம்,எனஅம்பாறை மாவட்டத்துக்குள் பல கிராமங்கள் பறிபோயுள்ளன.இக்கிராமங்கள் யாரால்,எச்சந்தர்ப்பத்தில்,எவ்வாறு திட்டமிட்டு பறிபோயுள்ளன என்பது எல்லோருக்கும் தெரியும். அம்பாறை மாவட்டத்தில் அழிக்கப்படட கிராமங்களிலே 2000க்கு மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். அவற்றுக்கான நீதிகள் விசாரிக்கப்படாது குற்றவாளிகள் தண்டிக்கப்படாது காலவோட்டத்தில் மறைக்கப்பட்டு அழிக்கப்பட்டு விட்டது. இது போன்று கிழக்கு மாகாணம் முழுதும் பல சோக வரலாறுகளும் கறைபடிந்த சம்பவங்களும் உள்ளன.குறிப்பாக சொல்லப்போனால் கிழக்கு மாகாணத்தில் தமிழ்கிராமங்களே அழிக்கப்பட்டன.அத்துமீறியகுடியேற்றங்களும் செய்யப்பட்டன.யுத்த காலத்தில் சில பாதிப்புகள் நடந்திருக்கலாம்.ஆனால் திட்டமிட்ட முறையில் தமிழர்களால் வேறு எந்த இனத்தவருடைய கிராமங்களுக்கும் தமிழர்களால் அழிக்கப்படடவோ அல்லது ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட வரலாறுகள் இதுவரை இல்லை என்பதே உண்மையாகும்.

நாங்கள் முஸ்லீம் சமூகத்துக்கோ ஏனைய சமூகத்தவருக்கோ எதிரானவர்களல்ல. ஆனால் தமது சுயநல அரசியலுக்காக எமது தமிழ் சமூகத்தை கைநீட்டி பழிசொல்லும் போது வெறுமனே கைகட்டி வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க முடியாது.எனவே விளம்பரங்களுக்காக வாய் போன போக்கில் வார்த்தைகளை அள்ளி வீசாது வரலாறுகளை படித்த பின்னர்.பொதுவெளியில் பேசுவது சிறந்தாகும் என்றார்.

## மட்டக்களப்பில் மருத்துவமனைகள் நிறைந்தன திணறும் சுகாதார துறையினர்

நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாக பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்தார்.

மட்டங்களப்பில் சடுதியாக தொற்றாளர்களது எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரிக்குமானால் தொற்றாளர்களை வேறு மாவட்டங்களுக்கு அனுப்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை 27 பேர் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர். அத்துடன் மாவட்டத்தில் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2,555 ஆக பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ் பேசும் இளைஞர்களை கைது செய்து அவர்களின் எதிர்காலத்தை அரசாங்கம்

மவாட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக போராளிகள் கட்சியின் மட்டக்களப்பு மாவாட்ட நிருவாகப் பொறுப்பாளர் நாகராசா பிரதீபராசா என்பவர் செவ்வாய்கிழமை பெரியபோரதீவு மட்பாண்ட நிலைய வீதியில் அமைந்துள்ள அவரது வீட்டில் வைத்து களுவாஞ்சிகுடி பொலிசாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் நேற்று புதன்கிழமை மாலை பொலிஸ் நிலையத்திற்குச் சென்று இவ் விடயம் தொடர்பில் கேட்டறிந்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்; களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையத்திற்கு சென்று ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஒரு அங்கத்தவரும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஒரு ஆதரவாளரும், முன்னாள் போராளியுமான எமது சகோதரர் ஒருவரை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்து களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையத்தில் வைத்துள்ளார்கள். நான் இன்று அவரைச் சந்திப்பதற்காகச் சென்றிருந்தேன்.

அவர் மீது வைத்திருக்கின்ற குற்றச்சாட்டு என்னவெனில் 2017 ஆம் ஆண்டு முகநூலில் ஏதோ ஒரு பதிவைப் போட்டதாகவும், அந்தப் பதிவின் காரணத்தால் அவரை விசாரணைக்காக எடுத்ததாகவும், சொல்லியிருக்கின்றார்கள். அவருக்கு எதிராக இருக்கும் ஆதாரம் என்னவெனில் முகநூலிலே ஏதோ ஒரு புகைப்படம் இருப்பது மட்டும்தான்.

இந்த அரசாங்கம் தொடர்ந்தும் இவ்வாறு தமிழ் பேசும் இளைஞர்களை வடக்கு கிழக்கு மாத்திரமின்றி இலங்கையின் அனைத்துப் பிரதேசங்களிலும் கைது செய்து இவ்வாறு கஷ்ரத்திற்குள் தள்ளிவிடுவதை நாங்கள் கடந்த ஒரு சில மாதங்களாக அவதானிக்கின்றோம். தற்போது களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்த சகோதரர் கடந்த யுத்தத்திலே ஒரு கலை இழந்த விசேட தேவை உள்ள ஒருவராவார், இவர் ஒரு புனர்வாழ்வளிக்கப்பட்டவராவார்.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்து வடக்கு, கிழக்கிலே நடைக்கிறது. ஏன் என்பதை நாங்கள் ஆராயவேண்டும். தற்போது புனர்வாழ்வளிக்கப்படாதவர்கள் அரசாங்கத்துடன் ஒட்டிக் கொண்டிருப்பதை நாங்கள் காண்கின்றோம். அவர்கள் அரசாங்கத்தின் கைக்கூலியாக செயற்படுகின்றார்கள். அவ்வாறு அவர்கள் இருக்கும்போது அப்பாவியான இவ்வாறான இளைஞர்களை அதாவது திருமணம் செய்து ஒரு மாதம்தான் முடிவுற்ற நிலையில் குறித்த அந்த நபரைக் கைது செய்து வைத்துள்ளதென்பது மிக மிக கவலையான விடயம்.

வாகரைப் பிரதேசத்திலே 2020 நவம்பர் 20 ஆம் திகதி கைது செய்யப்பட்ட நபர் ஒருவர் கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலே தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிக்கு தீவிர ஆதரவாக செயற்பட்டவர், அதேபோல் செங்கலடி பிரதேசத்திலே கைது செய்யப்பட்ட நபர் ஒருவர் முற்போற்கு தமிழர் அமைப்போடு சேர்ந்து செயற்பட்டவராவர். இவ்வாறு கட்சிபோதமின்றி அரசாங்கம் தமிழர்கள் மீது வன்முறைகளைக் கையாளுகிறது. இந்த அரசாதங்கத்துடன் ஒட்டிக்கொண்டிருப்பவர்கள் ஏன் இதுபற்றி கதைக்காமலுள்ளமை கவலையாகவுள்ளது. நீங்களும் தமிழ் மக்களின் நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான்.

கடந்த வருடத்திலிருந்து முகநூலிலே, புகைப்படம் போட்டு ரெக் செய்தவர்களை சிறுபிள்ளைத்தனமான முறையில் கைது செய்தவர்களை விடுதலை செய்யுமாறு கேட்டிருந்தோம். அதற்கு பிணை வழங்க முடியாது என அமைச்சர் தெரிவித்திருந்தார். நாடாளுமன்ற உறுப்பினர் சிவனேசதுரை சந்திரகாந்தன் அவர்களுக்கு பிணை வழங்கியது போல் ஏனையவர்களுக்கும் வழங்கலாம் என நான் தெரிவித்திருந்தேன். சந்திரகாந்தன் அவர்களும் ஏனைய தமிழ் இளைஞர்களை விடுவிப்பதற்கு முன்வர வேண்டும் என அவர் இதன்போது தெரிவித்தார்.




## மண் கடத்தலில் ஈடுபட்ட 14 பேர் கைது

நேற்று புதன்கிழமை சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட பதினான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், பதினான்கு வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் மட்டக்களப்பு மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் பரிசோதகர் பி.எஸ்.பி.பண்டார தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சட்டவிரோதமானமுறையில் மணல் கடத்தல் இடம்பெற்றுவரும் நிலையில் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாசிங்கவின் வழிகாட்டலில் சட்டவிரோத மணல் அகழ்வை தடுக்கும் வகையில் பல்வேறு வேலைத் திட்டங்கள் இடம்பெற்று வருகின்றது.

அந்த வகையில் வாகரை ஓமடியாமடு பகுதியில் இடம்பெற்ற சுற்றிவளைப்பில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டுள்ள எட்டு உழவு இயந்திரம் மற்றும் சட்ட விதிமுறைகளை மீறி மணல் ஏற்றுவதற்கு பயன்படுத்தப்பட்ட ஆறு டிப்பர் வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அதன் சாரதிகள் பதினான்கு பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வாகரை ஓமடியாமடு பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வு இடம்பெற்று வருவதாக கிடைத்த தவலையடுத்து மட்டக்களப்பு மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் பரிசோதகர் பி.எஸ்.பி.பண்டார தலைமையில் வாகரை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, மட்டக்களப்பு குற்றத்தடுப்பு பிரிவு உதவி பொலிஸ் பரிசோதகர் எம்.பிரதீப், வாழைச்சேனை பொலிஸ் நிலைய ஊழல் குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி தயான் ராஜகருணா, குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மட்டக்களப்பில் 8 முதல் தடுப்பூசி வழங்கப்படும்

**வழங்கல் ஜூன் 8 ம் திகதி தொடங்கும் என கொவிட் 19 பரவலை தடுப்பதற்கான தேசிய செயல்பாட்டு மையத்தின் தலைவரும் பாதுகாப்பு பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.**

**அந்த தடுப்பூசிகள் முதலில் சிரேஸ்ட பிரஜைகள், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் அதிக ஆபத்துள்ள கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள அரசு ஊழியர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.**

## மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு எந்த பாதிப்பும் வரக்கூடாது

வேண்டுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தெரிவித்தார். தற்போதைய நிலைமைகளுக்கு மத்தியிலும் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைவதற்கு இடமளிக்க முடியாதென்றும் சவாலை வெற்றிகொண்டு நாடு என்ற வகையில் முன்னோக்கிச் செல்லும்போது, அனைவரதும் பங்களிப்பு அவசியமாகும் என்றும் குறிப்பிட்ட ஜனாதிபதி, கைத்தொழில் நிலையங்கள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களைத் தொடர்ச்சியாகப் பேணுவதற்குத் தேவையான முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு ஆளுநர்களிடமும் மாவட்டச் செயலாளர்களிடமும் தெரிவித்தார்.

மாகாண ஆளுநர்கள் மற்றும் மாவட்டச் செயலாளர்களுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற மாதாந்த சந்திப்பின்போதே, ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

கைத்தொழில் நிலையம் அல்லது அபிவிருத்தித் திட்டச் சூழலில் நோய்த் தொற்றாளர் ஒருவர் இனங்காணப்படும் பட்சத்தில், அந்தத் தொழிற்சாலையை அல்லது திட்டத்தை ஒரேயடியாக மூடிவிடுவதற்குப் பதிலாக சுகாதாரப் பரிந்துரைகளைப் பின்பற்றி தொடர்ச்சியாகப் பேணுவதற்கான சூழல் குறித்துக் கண்டறிய வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பயணக்கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் இயல்பு வாழ்க்கைக்கு ஏற்பட்டிருக்கும் சவால்கள் மற்றும் பிரச்சினைகள் குறித்தும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. உரிய சுகாதாரப் பரிந்துரைகளைப் பின்பற்றி, கைத்தொழில் மற்றும் அத்தியாவசிய சேவைகளை பேணுவதற்கு அரசாங்கம் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ள நிலையில், பிரதேச மட்டத்தில் குறித்த நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்போது குறைபாடுகள் இடம்பெற்றிருப்பது தொடர்பில் தெரியவந்திருப்பதாக, ஜனாதிபதி குறிப்பிட்டார்.

பிரதேச மட்டத்தில் விவசாயிகளின் மரக்கறி மற்றும் பழவகைகளை மேலதிக விலைக்கு கொள்வனவு செய்து விநியோகிக்கும் பொறிமுறையைச் சரியாக நடைமுறைப்படுத்துமாறு பணிப்புரை விடுத்த ஜனாதிபதி, விவசாயப் பொருளாதாரம் வீழ்ச்சியடைவதற்கு இடமளிக்காதிருப்பது, சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரினதும் பொறுப்பாகும் எனக் குறிப்பிட்டார்.

தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கு நாட்டுக்குத் தேவையான முழுமையான தடுப்பூசி தொகை தற்போது கிடைத்து வருகின்றது. விஞ்ஞானபூர்வமாகவும் உரிய திட்டமிடல்களுக்கு அமையவும் குறித்த நடவடிக்கைகள் இடம்பெறுவதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, இதன்போது மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகாத வகையில் சுகாதாரத்துறைக்குத் தேவையான மேலதிக ஒத்துழைப்பை, அரசியல் துறை சார்ந்தவர்களிடமும் ஆளுநர்கள் உள்ளிட்ட அனைத்து அரச அதிகாரிகளிடமிருந்தும் தான் எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார். விவசாயிகளுக்குத் தேவையான சேதனப் பசளைகளை இலவசமாக வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதிஸ, சேதனப் பசளையுடனான விவசாயத்தை ஊக்குவிப்பதில் உள்ள சவாலை வெற்றிகொள்வதற்குத் தேவையான உதவியை வழங்குமாறு ஆளுநர்களை அறிவுறுத்தினார். சேதனப் பசளை உற்பத்தியில் ஈடுபடும் சிறு வியாபாரிகளுக்கும் விவசாய சங்கங்களுக்கும் தேவையான உதவிகளை, அரச வங்கிகளின் ஊடாகச் சலுகை வட்டிக்கு கடன் வழங்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். தற்போதைய பெருந்தொற்று நிலைமையைக் கட்டுப்படுத்தி இயல்பு வாழ்க்கையைப் பாதுகாப்பதற்கும் சவால்களுக்கு மத்தியிலும் நாட்டின் எதிர்காலத் திட்டங்களை வெற்றிகரமானதாக முன்னெடுப்பதற்கும், ஜனாதிபதி தலைமையில் அரசாங்கம் மேற்கொண்டுவரும் அர்ப்பணிப்புகளுக்கு ஆளுநர்கள் தமது பாராட்டுக்களைத் தெரிவித்தனர்.

துறைமுகங்கள், புகையிரதம், சுங்கம், எரிபொருள் விநியோகம், பொதுப்போக்குவரத்துச் சேவைகள், வங்கிகள், உள்ளூராட்சி நிறுவனங்களை அத்தியாவசிய சேவைகளாக வர்த்தமானி மூலம் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமை, தங்களது செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு பெரும் உதவியாக அமைந்ததாக மாவட்டச் செயலாளர்கள் தெரிவித்தனர்.

மாகாண ஆளுநர்கள், ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க ஆகியோரும் அரச அதிகாரிகளும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.




## ஓட்டமாவடி பிரதான வீதிகளில் பொலிஸ், இராணுவத்தினர் சோதனை

**செல்வதை தடுக்கும் வகையில் பாதுகாப்பு பிரிவினர் சோதனை நடவடிக்கைளை மேற்கொண்டு வருகின்றனர்.**

**அந்த வகையில் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மக்கள் நடமாட்டத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தலைமையிலான பொலிஸ் குழுவினர் மற்றும் இராணுவத்தினர் ஓட்டமாவடி பிரதேசத்தில் பிரதான வீதிகளில் தேவையின்றி வரும் மக்களை சோதனை செய்து வீட்டுக்கு திருப்பி அனுப்பி வைக்கும் நடவடிக்கை இன்று புதன்கிழமை இடம்பெற்றது.**

**பயணக்கட்டுப்பாடு அமுலில் உள்ள நிலையில் அனுமதி பெற்றவர்கள் மற்றும் மருந்தகங்கள் என்பவற்றுக்கு செல்பவர்களுக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், தேவையின்றி வெளியில் செல்பவர்களை பரிசோதனை செய்து வீடுகளுக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டது.**

**வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மருந்தகங்கள் மாத்திரம் திறந்து காணப்படுவதுடன், பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் தொடர்ந்து பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.**

SwissLife
Select

சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...

மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி



Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.

Email : krishnasamy.thileepan@swisslife-select.ch | Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65

உதயகுமார் கல்வி நிலையம்



முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+0966502126923
n.uthayakumar1981@gmail.com

SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28

வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்

10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க

- இருக்கும் வீட்டை வைத்து இன்னொரு வீட்டை வாங்க...
- வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
- வீடு வாங்குவதற்கான ஆயுட்காப்புறுதி
- Architect வேலைகள்

இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.

» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி



Sj SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்

பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்

வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.

திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.

+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch

MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்

கல்வியே துணை
பள்ளித் தலைமைனத்தும்
பேரெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும்
நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில்
எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை
எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM

Mathe மகேந்திரா-வின் தெளிவான
கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

MBZ
S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

Aaran Ayurveda
& Wellness Massage



Weinberg Strasse - 22, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | 077 982 1291 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt

# உரமானிய தட்டுப்பாடு மட்டு. விவசாயிகள் அதிருப்தி

(துறையூர் சஞ்சயன்)

நாட்டின் ஒரு சில மாவட்ட கமநல சேவைகள் நிலையங்களில் நிலவும் பாரிய உரத்தட்டுப்பாட்டினால், விளைச்சல் குன்றும் அபாயமுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

மட்டக்களப்பு மாவட்ட கமநல சேவைகள் நிலையங்களில் உரத்தை பெற்றுக்கொள்ளச் செல்பவர்கள், உரம் இல்லை என்ற நிலையில் அதிகாரிகளால் திருப்பி அனுப்பப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

செய்கை பண்ணப்பட்ட நெற்செய்கை மற்றும் மரக்கறி வகைகளுக்கு உரிய காலத்திற்குத் தேவையான உரம் இடப்படாமையால் விளைச்சல் குன்றும் அபாய நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் போதிய வருமானத்தைப் பெற முடியாத நிலைமையை எதிர்நோக்க நேரிடும் எனவும் விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஒரு சில கமநல சேவைகள் நிலையங்களில் உரம் வரவிரல்லையென, இன்று போய் நாளை வா என்ற நிலையில் விவசாயிகள் தொடர்ச்சியாக திருப்பி அனுப்பப்படுவதாகவும் தெரியவருகிறது.

இந்த நிலையில், கடைகளில் அதிக விலைக்கு உரம் விற்பனை செய்யப்படுவதாகவும் வறுமை நிலையிலுள்ளோர் பல்வேறு சவால்களை எதிர்கொள்வதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது. உரமானியம் தொடர்பில் விரைவில் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்குமாறு விவசாயிகள், அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் கிருமித் தொற்று நீக்கும் நடவடிக்கை



(ரீ.எல்.ஜவ்பர்கான்)

தீவிர கொரோனா வைரஸ் பரவல் காரணமாக காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் கடமை புரியும் 32 பொலிசாருக்கு கொரோனா வைரஸ் தாக்கம் உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து தற்காலிகமாகமாக பொலிஸ் நிலையத்தின் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளன.இப்பொலிஸ் நிலையத்தில் நேற்று காலை முழுமையான கிருமித் தொற்று நீக்கம் செய்யப்பட்டது.

இப் பொலிஸ் நிலையத்தில் கடமை புரியும் 82 பொலிசாருக்கு பொலிசாருக்கு பீசீஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டபோது 32 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து கடந்த ஒரு வாரகாலமாக பொலிஸ் நிலையம் தற்காலிகமாக பணிகளை நிறுத்தியுள்ளதுதற்கமைய மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாசிங்கவின் வழிகாட்டலில் இன்று காத்தான்குடி பொலிஸ் நிலையம் முழுமையாக கிருமித் தொற்று நீக்கம் செய்யப்பட்டது.

# பூம்புகார் கிராம மக்களுக்கு சுகாதாரப் பொதிகள்




(பொன்ஆனந்தம்)

ஒரு மாத காலமாக முடக்கப்பட்ட பூம்புகார் கிராம மக்களுக்கு சுகாதாரப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

திருகோணமலை மாவட்டத்தின் பட்டணமும் சூழலும் பிரதேச செயலகத்திற் உட்பட்ட ஒரு மாதகாலத்திற்கு மேலாக தனிமைபடுத்தப்பட்டிருக்கும் பூம்புகார் கிராம உத்தியோகத்தர் பிரிவில் வசிக்கும் மக்களுக்ககே இலங்கை பழைய மாணவர் ஒன்றியம் பிரான்ஸ் அமைப்பினரால் செவ்வாய்க்கிழமை சுகாதார பொதிகள் 770 குடும்பங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது. பெண்களுக்கு அவர்களின் அடிப்படை தேவைகளை, சுகாதார பாதுகாப்பு பற்றிய,அதற்கான பொருட்கள் வழங்கப்படவில்லை என்று மக்கள் பலரும் தெரிவித்தார்கள்.

இப்பொதிகள் விநியோக நடவடிக்கை நிகழ்வில் கிராம உத்தியோகத்தர் சமுர்த்தி உத்தியோகத்தர் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களும், கிராம அபிவிருத்தி சங்கங்கள் மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள் சனசமூக நிலைய உறுப்பினர்களுக்கும் பலர்கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# மண் அகழ்வில் ஈடுபட்டிருந்த தொழிலாளி நீரில் மூழ்கி பலி

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு- மயிலவெட்டுவான் வீரக்கட்டு ஆற்றில் மண் அகழ்வில் ஈடுபட்டிருந்த தொழிலாளியொருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

கிரான் - கோரகல்லிமடு பிரதேசத்தை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான 44 வயதுடைய கதிரேசு கங்கேஸ்வரன் என்பவரே உயிரிழந்தவரென அடையாளங் காணப்பட்டுள்ளதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மயிலவெட்டுவான் வீரக்கட்டாற்றின் நடுவிலுள்ள மணல் திட்டியில் மணல் அகழ்ந்து வள்ளத்தில் ஏற்றிவிட்டு கரையிலுள்ள மரம் ஒன்றில் கட்டப்பட்டிருந்த கயிற்றில் உதவியுடன் கரை திரும்பும் போது அந்த ஆற்றின் மிகஆழமான பகுதியில் கைகள் விறைத்ததையடுத்து நீரில் மூழ்கியுள்ளார்.

அதிலிருந்து சிலமணிநேரத்தில் மீட்கப்பட்டவர் மூச்சையிழந்து காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

திடீர் மரணவிசாரணையதிகாரி எம் எஸ் எம். நஸிர் சம்பவ இடத்திற்கு நேரடியாகச்சென்று பார்வையிட்டு விசாரணைகளை ஆரம்பித்தார்.

கரடியனாறு பொலிஸ் சார்ஜன்ட் ஏஎம்ஏ. நதீர் வாக்குமூலங்களை நெறிப்படுத்தினார்.

மட்டக்களப்பு வைத்தியசாலையில் உடல்கூறு பரிசோதனை மற்றும் பீசீஆர் பரிசோதனையும் நடைபெற்றன.

# சிறுபோக நெற் செய்கைக்கான உரம் கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

திருகோணமலை மாவட்டம் தம்பலகாமம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள விவசாயிகளின் நலன் கருதி விவசாய உரப் பசளை உரிய நேரங்களுக்குள் தங்களுக்குள் கிடைப்பதனால் விவசாயிகள் நன்மையடைகிறார்கள் என அப் பிரதேச விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

முள்ளிப் பொத்தானை கமநல சேவைகள் பிரிவில் உள்ள சுமார் பல ஏக்கர் நிலங்களில் சிறுபோக நெற் செய்கை இடம் பெறுகிறது. இதனால் தங்களுக்கு தேவையான உரப் பசளை கிடைப்பதில் தாமதம் இன்மையால் இது விவசாயிகளின் நலனில் அக்கறை செலுத்துவதால் நாட்டின் ஜனாதிபதிகாகு நன்றிகளை தெரிவிப்பதாகவும் விவசாதிகள் மேலும் தெரிவிக்கின்றனர்கள்.

கொரோனா கால பயணக் கட்டுப்பாடு இருந்த போதிலும் தங்களது விவசாயத்தை மேற்கொள்ள அரசால் முன்னெடுக்கப்பட வேண்டிய நடைமுறைகள் துரிதமாக இடம் பெற்று எவ்வித அசௌகரியங்களும் இன்றி குறித்த விவசாய நெற் செய்கைக்கு பாரிய ஒத்துழைப்பு வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

# கொரோனா வைரஸிலிருந்து நாடு மீண்டெழ ‘பிரித்’ வழிபாடு



(பொன்ஆனந்தம்)

கொரோனா வைரஸ் தாக்கம் நாட்டிலிருந்து ஒழியவும் அவ்வைரசிலிருந்து அனைவரும் பாதுகாப்பு பெற்று சுகதேகிகளாக வாழும் நோக்கில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோரளவின் வழிகாட்டலுக்கமைய நேற்றிரவு மாவட்ட செயலகத்தில் பிரித் நிகழ்வு நடைபெற்றது.

சுகாதார நடைமுறைகளை பேணி இடம்பெற்ற இப்பிரித் நிகழ்வில் சங்கைக்குறிய தேரர்கள் நாட்டு ஜனாதிபதி ,பிரதமர் மற்றும் அனைத்து மக்களுக்கும் ஆசிர்வாதங்களை வேண்டினர்.

பிரித் நீர் தாங்கிய பிரத்தியேக வாகனம் தேரர்களின் ஆசிர்வாதத்திற்கு மத்தியில் திருகோணமலை நகரின் வீதிகளில் வலம்வந்ததுடன் மக்களுக்கு பிரித் நீரையும் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# நடமாட்ட தடை காரணமாக வாழ்வாதாரத்தை இழந்துள்ள குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைப்பு

(ரக்ஸனா )





கோவிட் - 19 காரணமாக அமுலிலுள்ள நடமாட்டத் தடை காரணமாக அன்றாடம் நாட்கூலி வேலைசெய்து அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தில் தமது கடும்பத்தைப் பாதுகாத்துவரும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்திற்குட்பட்ட எருவில், மற்றும் களுவாஞ்சிகுடி ஆகிய பகுதிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 200 குடும்பங்களுக்கு புதன் கிழமை மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை உறுப்பினர் மே.வினோராஜ் அவர்களின் சொந்த நிதியில் உலர் உணவுப் பொருட்களை வழங்கி வைத்துள்ளார்.

தமது நிலமை அறிந்து தாமாக முன்வந்து மனமுவந்த காலடிக்கே கொண்டுவந்து உலர் உணவுப் பொருட்களை வழங்கிய மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை உறுப்பினர் மே.வினோராஜ் அவர்களுக்கு அப்பகுதி மக்கள நன்றிளைத் தெரிவித்துள்ளனர்.






# ஏறாவூரில் 5000 ரூபா



(ஏறாவூர் நிருபர்)

கொரோனா தொற்று அச்சம் காரணமாக நாட்டில் விதிக்கப்பட்டுள்ள பயணக்கட்டுப்பாட்டினால் வாழ்வாதாரத்தை இழந்துள்ள குடும்பங்களுக்கு ஐயாயிரம் ரூபா விசேட கொடுப்பனவு வழங்கும் திட்டத்தின் கீழ் ஏறாவூர் நகர் பிரதேசத்திலுள்ள சுமார் பதினோரோயிரம் குடும்பங்களுக்கு நிதி பகிர்ந்தளிக்கும் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.

பிரதேச செயலாளர் திருமதி நிஹாறா மௌஜூத் பங்கேற்புடன் ஏறாவூர் மத்தி மற்றும் ஏறாவூர் கிழக்கு ஆகிய சமுர்த்தி வங்கிகளில் ஆரம்ப நிகழ்வுகள் நடைபெற்றன.

சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர்களான எஸ்ஏஎம். பஸீர் மற்றும் திருமதி பிரதீப் குமார் ஆகியோர் நிகழ்வுகளுக்கு தலைமை வகித்தனர்.

இதன்போது சமுர்த்தி பயனாளிகள் இக்கொடுப்பனவினைப் பெற்றுக் கொண்டனர்.

சமுர்த்தி பெறத்தகுதியான குடும்பங்கள், முதியோர் கொடுப்பனவினைப் பெறுவோர், விசேட தேவையுடையோர் மற்றும் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோருக்கும் இந்நிதி வழங்கப்படவுள்ளது.

# கோறளைப்பற்று மத்தியில் எட்டு பேருக்கு கொரோனா

(ந.குகதர்சன்)

கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் செவ்வாய்க்கிழமை அறுபத்தாறு நபர்களுக்கு அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதில் எட்டு நபர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.ரீ.நஜீப்கான் தெரிவித்தார்.

கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் தனிமைப்படுத்தலில் இருந்தவர்கள், பயணக்கட்டுப்பாட்டை மீறி பயணித்தவர்கள், சட்டவிதிமுறைகளை மீறி திருமண நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் என அறுபத்தாறு (66) நபர்களுக்கு அன்டிஜன் பரிசோதனை மற்றும் இருபத்தேழு (27) நபர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனைகளும் இடம்பெற்றது.

குறித்த அன்டிஜன் பரிசோதனை நிகழ்வில்; மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.எஸ்.நௌபர், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள், வாழைச்சேனை பொலிஸார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அதிகரித்து வரும் நிலையில் சுகாதார வைத்திய அதிகாரிகளால் பி.சி.ஆர். பரிசோதனைகள் மற்றும் அன்டிஜன் பரிசோதனைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.



# திருக்கோவில் பிரதேசத்தில் 5000 வழங்கி வைப்பு



(திருக்கோவில் நிருபர்)

நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் 19 மூன்றாம் அலை அனர்த்த நிலைமைகளால் பாதிக்கப்பட்ட வறிய மக்களுக்கு அரசினால் நான்காம் கட்ட ஐந்தாயிரம் ரூபா பணம் திருக்கோவில் பிரதேசத்தில் நேற்று வழங்கப்பட்டு இருந்தன.

இவ் 5000 ரூபா கொடுப்பனவானது திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரனின் தலைமையில் திருக்கோவில் விநாயகபுரம் சமூர்த்தி வங்கி கிளையின் ஊடாக திருக்கோவில் சமூர்த்திப் பயனாளி குடும்பங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இவ் கொடுப்பனவுகள் கொவிட் 19 சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி வழங்கி வைக்கப்பட்டு இருந்ததுடன் விநாயகபுரம் சமூர்த்தி வங்கி பிரிவின் கீழ் உள்ள சுமார் 3400 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

இவ் கொடுப்பனவுகளை திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன் உதவிப் பிரதேச செயலாளர் கே.சதிசேகரன் உதவித் திட்டப் பணிப்பாளர் எம்.அனோஜா மற்றும் சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் கிராம சேவையாளர் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கள விஜயத்தின் ஊடாக வழங்கி வைத்திருந்தனர்.

# திருக்கோவில் பிரதேச செயலகத்தில் கொரோனா தொற்று நீக்கி விசிறல்

(திருக்கோவில் நிருபர்)

அம்பாறை திருக்கோவில் பிரதேசத்தில் 11 பொலிசாருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் முக்கிய இடங்களில் கொரோனா தொற்று நீக்கி திரவம் விசிறப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் திருக்கோவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பி.மோகனகாந்தனின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக இவ் தொற்று நீக்கி திரவம் விசிறும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



இதனடிப்படையில் திருக்கோவில் பிரதேச செயலகத்திற்கு நேற்றைய தினம் திருக்கோவில் பொலிஸார் கொவிட் தடுப்பு செயலணிக் குழுவின் அலுவலக கடமை முன்னிட்டு வந்து சென்றமை காரணமாக திருக்கோவில் பிரதேச செயலக வளாகம் மற்றும் அலுவலங்கள் என அனைத்து இடங்களுக்கும் கொரோனா தொற்று நீக்கி திரவம் விசிறப்பட்டுள்ளன.





பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் சுற்றறிக்கைக்கு அமைவாக கொவிட்-19 நான்காம் கட்ட கொடுப்பனவின் போது 2021/06/02 ஆந் திகதி அன்று சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் உள்ள 51 கிராம சேவகர் பிரிவுகளிலும் வீடு வீடாகச் சென்று வழங்கி வைக்கும் நிகழ்வினை மட்டக்களப்பு தரவை -02, மற்றும் வீரமுனை-01 ஆகிய பிரிவுகளில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனிபாஅவர்களால் ஆரம்பித்து வைத்த போது...

படங்கள். வி.ரி.சகாதேவராஜா

# கந்தளாயில் தடுப்பூசி செலுத்தும் வேலைத்திட்டம் முன்னெடுப்பு



(எப்.முபாரக் )

நாட்டில் கோவிட் - 19 தொற்று அச்சுறுத்தல் அதிகரித்துள்ள நிலையில் கோவிட் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை நாட்டின் பல பகுதிகளிலும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் திருகோணமலை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் தொடர்ச்சியாக தடுப்பூசி வழங்கும் நடவடிக்கையானது முன்னெடுக்கப்படுகின்றது.

கந்தளாய் பிராந்திய சுகாதார அதிகாரி அலுவலகத்திற்குட்பட்ட வைத்தியசாலைகளில் கடமையாற்றும் தாதிமார்கள் மற்றும் வைத்தியசாலைகளில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களும் இரண்டாம் கட்ட தடுப்பூசியினை செலுத்தாத சுகாதார உத்தியோகத்தர்களும் தடுப்பூசியினை பெற்றுக்கொண்டார்கள்.

# தடை செய்யப்பட்ட சுருக்கு வலை கைப்பற்றப்பட்டது

(ரக்ஸனா)

கடற்படையினரின் உதவியுடன் களுவாஞ்சிகுடி கடற் பகுதியில் வைத்து தடை செய்யப்பட்ட சுருக்கு வலைகளைப் பயன்படுத்தி மீன் பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்களிடமிருந்து ஒரு வலை, ஒரு இயந்திரப் படகு, ஒரு என்ஜின், இரண்டு வெற்றிகள், போன்றவற்றைக் கைப்பற்றியுள்ளதாக கடற்றொழில் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் ருக்சான் குரூஸ் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளதாகவும், கைப்பற்றிய பொருட்களை செவ்வாய்கிழமை மாலை களுவாஞ்சிகுடி சுற்றுலா நீதவான் நீதிமன்றில் சமர்ப்பித்து நீதிமன்ற நடவடிக்கைகள் முன்னெடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போதைய கொவிட் சூழல் காரணமாக தமது முழுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமலுள்ள போதிலும் மீனவர்களின் நலன்கருத்தி நாங்கள் செயற்பட்டு வருகின்றோம் எனவும் அவர் இதன்போது மேலும் தெரிவித்தார்.

Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
Tel : 044 2410241
Fax : 044 2410245
sikaramgmbh@gmail.com / www.sikaram.com

# சமூர்த்தி பயனாளிகளுக்கு வழங்கப்படும் நான்காம் கட்ட விசேட கொடுப்பனவு மன்னாரில் ஆரம்பம்

( வாஸ் கூஞ்ஞ)

கொவிட் 19 தொடர்பாக அரசால் வறுமை கோட்டுக்குள் இருக்கும் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் 5000 ரூபா நான்காம் கட்ட கொடுப்பனவு மன்னார் மாவட்டத்தில் நேற்று புதன் கிழமை தொடக்கம் வழங்கப்படுவதாக மன்னார் மாவட்ட சமூர்த்தி பணிப்பாளர் ஐ. அலியார் தொவித்தார்.

இவ் முதல்நாள் கொடுப்பனவை மன்னார் பெரியகடை பகுதியில் மன்னார் மாவட்ட சமூர்த்தி பணிப்பாளர் ஐ.அலியார் மற்றும் மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப் ஆகியோர் பயனாளிகளுக்கு வழங்கி ஆரம்பித்துவைத்தனர்.



இது தொடர்பாக மன்னார் மாவட்ட சமூர்த்தி பணிப்பாளர் ஐ. அலியார் தெரிவிக்கையில் மன்னார் மாவட்டத்தில் 33378 குடும்பங்களில் சமூர்த்தி திட்டத்தின் கீழ் பயனாளிகளாக திகழும் 22895 குடும்பங்களுக்கு இவ் திட்டத்தின் கீழ் இவ் கொடுப்பனவுகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவர்களுக்கான கொடுப்பனவு பணம் யாவும் தங்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் மன்னார் மாவட்டத்திலுள்ள சமூர்த்தி வங்கிகளிலிருந்து இதற்கான உத்தியோகத்தர்கள் பணத்தை எடுத்துக்கொண்டு கிராமம் கிராமமாகச் சென்று பயனாளிகளின் வீடுகளிலேயே வழங்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் 153 கிராமங்கள் இருப்பதாகவும் இந்த நான்காம் கட்ட கொடுப்பனவில் முதல் கட்டமாக புதன்கிழமை (02) இவ் கொடுப்பனவு வழங்கப்படுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தொடர்ந்து பயனாளிகளுக்கு கட்டம் கட்டமாக இவ் கொடுப்பனவு வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# 5000 ரூபா கொடுப்பனவு வழங்கும் திட்டம் ஆலையடிவேம்பிலும் ஆரம்பம்




(வி.சுகிர்தகுமார்)

கொவிட் 19 பேரிடர் காரணமாக பாதிக்கப்பட்டு வருமானத்தை இழந்த குடும்பங்களின் வாழ்வதாரத்தின் பொருட்டு அரசாங்கத்தினால் வழங்கப்படும் 5000 ரூபா கொடுப்பனவை வழங்கும் திட்டம் நேற்று தேசிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார புத்தெழிச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் சுற்று நிருபத்திற்கு அமைவாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் மூலம் சமுர்த்தி பயனாளிகள் உள்ளிட்ட பல்வேறு மட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களும் இக்கொடுப்பனவை பெற்றுவருகின்றனர்.

அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு அமைவாக சமுர்த்தி வங்கிகளினூடாக வழங்கப்படும் இப்பணம் ஆறு கட்டங்களாக சமுர்த்தி வங்கிகளினூடாக வழங்கப்படவுள்ளது.

இதற்கமைவாக அம்பாரை மாவட்டம் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவிலும் பிரதேச செயலாளர் வி.பபாகரனின் கண்காணிப்பின் கீழ் சமுர்த்தி தலைமையக முகாமையாளர் என்.கிருபாகரனின் வழிகாட்டலில் இன்று சமுர்த்தி பயனாளிகளுக்கான கொடுப்பனவு வழங்கும் திட்டம் இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இக்கொடுப்பனவு வழங்கும் நிகழ்வில் ஆலையடிவேம்பு தெற்கு வங்கி முகாமையாளர் கே.அசோக்குமார், கருத்திட்ட முகாமையாளர் என்.சுரேஸ்காந், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இக்கொடுப்பனவை பெறும் பொருட்டு ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் 6880 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் 3 கோடியே 44 இலட்சம் ரூபா அரசாங்கத்தினால் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்தொகை ஆலையடிவேம்பு தெற்கு மற்றும் வடக்கு வங்கிகளின் மூலமும் நடமாடும் வங்கிச்சேவை மூலமும் வழங்கி வைக்கப்பட்டு வருகின்றது.

இக்கொடுப்பனவின் முன்னராக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான தொற்று நீக்கி மருந்துகள் மற்றும் முகக்கவசங்கள் சமுர்த்தி வங்கியால் வழங்கி வைக்கப்பட்டதுடன் மக்களுக்கான பணமும் கையளிக்கப்பட்டது.

இதனை பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்கள் பிரிவு ரீதியாக சுகாதார நடைமுறைகளை பின்பற்றி வீடுகளுக்கு சென்று பணத்தை ஒப்படைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

# நடமாடும் விற்பனை நிலையங்கள் ஊடாக அத்தியாவசிய பொருட்கள் மக்களுக்கு சென்றடையாவிடின் அனுமதிப் பத்திரங்கள் உடனடியாக இரத்து செய்யப்படும்!

## கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி தெரிவிப்பு!!

(சர்ஜுன் லாபீர்)

நாட்டில் தற்போதைய அசாதாரண சூழ்நிலையில் பயணத்தடையின் காரணமாக மக்கள் தங்களுடைய அத்தியாவசியமான பொருட்களை கொள்வனவு செய்வதற்காக அத்தியாவசிய தேவைக்கு வழங்கிய சலுகைகளையும் , அனுமதியையும் சிலர் துஸ்பிரயோகம் செய்கிறார்கள் இவர்களை நாங்கள் அடையாளம் காண வேண்டும். நடமாடும் விற்பனைக்காக அனுமதியினை பெற்றுவிட்டு தங்களின் வியாபார ஸ்தலங்களை திறந்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இது சட்டத்திற்கு முரணானது. எனவே அவ்வாறானவர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதி உடன் பறிமுதல் செய்யப்பட்டு இரத்து செய்யப்படும். என கல்முனை பிரதேச செயலாளர் ஜே. லியாக்கத் அலி தெரிவித்தார்.

அரசாங்கத்தின் 5000 ரூபாய் கொரோனா நிதியினை மக்களுக்கு வழங்கும் செயற்திட்டத்தினை துரிதப்படுத்துவதற்கு கிராம சேவகர்கள்,பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு விளக்களிக்கும் நிகழ்வு நேற்று பிரதேச செயலகத்தில் சுகாதார வழிமுறைகளை பின்பற்றி நடைபெற்றது.இந் நிகழ்வில் கலந்து கொண்டு விளக்கம் அளிக்கும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

அரசாங்கத்தினால் பயணத்தடை நடைமுறையில் உள்ள காலப்பகுதியில் மக்களின் அத்தியாவசிய சேவைகளுக்காக 5 வகையான அனுமதி படிவங்களை அரசாங்கம் அறிமுகப்படுத்தி அதன் ஊடாக அத்தியாவசிய தேவைகளை நிறைவு செய்ய



அனுமதி வழங்கப்பட்டு இருக்கின்றது. அவ்வாறான அத்தியாவசிய பொருட்களை விற்பனை செய்வதற்காக அனுமதியினை பெற்றவர்கள் இன்று அதனை துஸ்பிரயோகம் செய்து வருகின்றனர் அவ்வாறனவர்களை கண்டறிவதற்காக பொலிஸ், இராணுவத்தினர் மற்றும் சுகாதார துறையினரோடு இணைந்து கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளோம்.

பெருமளவில் மீன் வியாபாரிகள், மரக்கறி வியாபாரிகள், சில்லரை கடை வியாபாரிகள் நடமாடும் விற்பனை ஊடாக மக்களுக்கு பொருட்களை வழங்காமல் தங்களுடைய வியாபார தளங்களிலேயே வைத்து விற்பனை செய்வதாக தங்களுக்கு பல்வேறுபட்ட முறைப்பாடுகள் நாளாந்தம் வந்துகொண்டே உள்ளன.எனவே அவ்வாறு அனுமதியினை முறைகேடாகப் பயன்படுத்துபவர்களின் அனுமதியை இரத்து செய்து அவர்களை சட்டத்தின் முன் நிறுத்தவுள்ளோம்.

## கல்முனை பிரதேசத்தில் வீடு வீடாக சென்று அரசாங்கத்தின் 5000 ரூபா கொடுப்பனவு!

(சர்ஜூன் லாபீர்)

நாட்டில் தற்போது துரிதமாக பரவிவரும் கொரோனா வைரஸ் இன் மூன்றாவது அலையின் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கான அரசாங்கத்தினால் வழங்கப்படும் 5000 ரூபா கொடுப்பனவு நேற்று நாடு பூராகவும் வழங்கப்பட்டு வருகின்றது

அந்த வகையில் கல்முனை பிரதேச செயலகத்தினால் பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி தலைமையில் நேற்று (2) கல்முனைக்குடி-12,மருதமுனை -1 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் பயணத்தடை காரணமாக ஒவ்வொரு வீடுகளாக சென்று கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரும்,மாவட்ட சமூர்த்தி பணிப்பாளருமான வி.ஜெகதீசன்



கலந்து கொண்டு கொடுப்பனவுகளை வழங்கி வைத்தார்.

## கொரோனா பயணத்தடையை மீறி சாய்ந்தமருது பகுதியில் நடப்பது என்ன?

(எம்.முபாரக்)



(பாறுக் ஷிஹான்)

நாடளாவிய ரீதியில் பயணத்தடை அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் சிலர் சுகாதார நடைமுறைகளை மீறிச்செயற்படுவது சமூகத்திற்கு ஆபத்தானதாக காணப்படுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டும் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக பயணத்தடை விதிக்கப்பட்டு நாட்டு மக்களை பாதுகாப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகின்றது.

எனினும் சிலர் சுகாதார நடைமுறைகளையும் மீறிச்செயற்படுவதை காணக்கூடியதாக உள்ளது.

இந்நிலையில் அம்பாறை மாவட்டத்தில் அண்மைக்காலமாக கொரேனா தொற்றாளர்கள் அதிகரித்துவரும் நிலையில் பயணக்கட்டுப்பாட்டை இறுக்கமாக கடைப்பிடிக்குமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுவரும் நிலையில் சாய்ந்தமருது பிரதேசத்தில் நேற்றும்(1) இன்றும்(2) அதனை மீறும் வகையில் சிலர் செயற்படுவதை காணமுடிகின்றது.

கல்முனை நகர் உள்ளிட்ட புறநகர் பகுதிகளில் பயணத்தடை இறுக்கமான முறையில் கடைப்பிடிக்கப்பட்டாலும் சாய்ந்தமருது போன்ற புறநகர் பகுதிகளில் பயணத்தடையினை மீறியை வகையில் சிலர் செயற்பட்டுவருவதை காணமுடிகின்றது.

பொலிஸாரும் இராணுவத்தினரும் பயணத்தடைகளை மீறுவோருக்கு எதிரான நடவடிக்கைகளை எடுத்துவரும் நிலையிலும் அதனையும் மீறும் வகையில் சிலரின் செயற்பாடுகள் அமைந்துள்ளது.

எதிர்காலத்தில் இவ்வாறான நடவடிக்கைகள் அம்பாறை மாவட்டத்திற்கு அச்சுறுத்தலாக அமையும் என சுகாதார பிரிவினர் எச்சரித்துள்ளனர்.

இது தவிர அம்பாரை மாவட்டத்தில் உள்ள பல்வேறு பிரதேச செயலாளர் பிரிவில் தற்போது கொரோனா தொற்றாளர்கள் அதிகரித்து வரும் நிலையில் இதனைக் கட்டுப்படுத்தி பிரதேச மக்களை பாதுகாக்கும் நோக்கில் பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகள் அந்தந்த பிரதேச கொவிட் 19 தடுப்பு செயலணிக் குழு முன்னெடுத்து வருகின்றன.

இதனை விட மக்களின் நலனை அடிப்படையாக கொண்டு அத்தியாவசிய பொருட்கள் மற்றும் மரக்கறி மீன் போன்ற பொருட்களை மட்டுப்படுத்தப்பட்ட நடமாடும் வியாபாரிகள் ஊடாக விற்பனை செய்யும் நிலையில் மீன் இறைச்சி விநியோகத்திற்காக அனுமதிகள் வழங்குவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டு உள்ளன.

இருந்த போதிலும் எந்த செயலணி உருவாக்கப்பட்ட போதிலும் கண்காணிப்பு நடவடிக்கைகள் மந்த கதியில் இடம்பெறுவதுடன் பயணத்தடையினை மீறுவோருக்கு எதிராக எந்தவித சட்டநடவடிக்கையும் எடுக்கப்படாமை தொடர்பில் பொலிஸ் தரப்பு தகவலின் ஊடாக அறிய முடிகின்றது.

மேலும் சாய்ந்தமருது பகுதியில் நேற்றும் இன்றும் அத்தியாவசிய தேவைகள் தவிர்ந்த வேறு எந்த தேவைகளுக்காகவும் வீதிகளில் வாகனங்களில் பயணித்தல், இளைஞர்கள் குழுக்களாக சேர்ந்து மோட்டார் சைக்கிள்களில் வீதிகளில் வீணாக சுற்றித் திரிதல், மீன் பிடிப்பவர்களைத் தவிர ஏனையோர் கடற்கரைகளில் அனாவசியமாக கூடி இருத்தல், அத்தியவசிய பொருட்களுக்காக அனுமதிக்கப்பட்ட இடங்களில் அதிகமானோர் கூடி இருத்தல், கொரோனா சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளை மீறி வீதிகள் மற்றும் மைதானங்களில் இளைஞர்கள் விளையாட்டுக்களில் ஈடுபடுதல் ,செயற்பாடுகள் தொடர்கதையாகவே உள்ளன என்பதை எமது ஊடக காணொளிகள் சுட்டிக்காட்டுகின்றது.

## கொரோனா தொற்றின் ஆபத்தறிந்து மக்கள் வீதிகளுக்கு இறங்குவதை தவிர்த்துக்கொள்ளவும்

### : சுகாதார வைத்திய அதிகாரி வேண்டுகோள் !

(நூருல் ஹுதா உமர்)

நாட்டில் வேகமாக அரிகரித்துவரும் கொரோனாவின் ஆபத்தை அறிந்து மக்கள் ஒத்துழைப்பு வழங்க முன்வரவேண்டும். கடந்த காலங்களில் மக்கள் தந்த ஒத்துழைப்பினாலையே இந்த மூன்றாம் அலையில் சாய்ந்தமருது பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நான்கு தொற்றாளர்கள் மட்டுமே அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். முன்னர் போன்றில்லாது மக்களின் அண்மைக்கால நடவடிக்கைகளில் சில அதிருப்தி நிலை காணப்படுகிறது என சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.எம்.அல் அமீன் றிசாட் தெரிவித்தார்.

தனது அலுவலகத்தில் நேற்று ஊடகவியலாளர்களை சந்தித்து பேசிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், இரவில் கூட எங்களினால் ரோந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜீ சுகுணன் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க நாங்கள் அர்ப்பணிப்புடன் மனித உயிர்களை காப்பாற்ற போராடிக் கொண்டிருக்கிறோம். கடந்த முதலாம், இரண்டாம் அலையை விட இந்த அலையில் இதுவரை பாதிப்பு குறைவாக இருந்தாலும் இனிவரும் காலங்களிலும் இந்த நிலை தொடரவேண்டும். அதற்காக மக்கள் தங்களின் பூரண ஒத்துழைப்பை வழங்க முன்வரவேண்டும்.

பொது சுகாதார பரிசோதகர்கள், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக சுகாதார



உத்தியோகத்தர்கள், கல்முனை பொலிஸார், பாதுகாப்பு படையினர் மற்றும் சாய்ந்தமருது பலநோக்கு அபிவிருத்தி செயலணி திணைக்களத்தின் பயிலுநர் குழுவும் இணைந்து பல்வேறு நடவடிக்கைகளை தினமும் அர்ப்பணிப்புடன் செய்துவருகிறோம். கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜீ சுகுணன் அவர்களின் வழிகாட்டல்களுடன் நடமாடும் வியாபாரிகளை சுகாதார நடைமுறைகளை பேணி வியாபாரம் செய்ய கொரோனா பரிசோதனைகள் செய்யப்பட்ட பின்னர் அனுமதி வழங்கப்படுறது. இறைச்சி வியாபாரத்திற்கும் கல்முனை மாநகர சபையுடன் கலந்துரையாடி ஒரு பொறிமுறையை உருவாக்கியுள்ளோம். மட்டுமின்றி விலைக்கட்டுப்பாடுகள் தொடர்பிலும் பொறிமுறையை உருவாக்க ஆலோசித்து வருகிறோம்.

ஆகவே மக்கள் வீணாக வீதிகளில் நடமாடி திரியாமல் வீடுகளில் இருந்து கொள்ளுமாறும் பெற்றோர்கள் தமது பிள்ளைகள் வீதிகளுக்கு இறங்குவது தொடர்பில் கரிசனையுடன் கூடிய அக்கறை செலுத்துமாறும் இதன்போது பொதுமக்களை அவர் கேட்டுக்கொண்டார்.